

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.6.2025) திருப்பத்தூர் விருந்தினர் இல்லத்தில், வாணியம்பாடி முஸ்லீம் கல்வி சங்கத்தின் தலைவர் அப்துல்லா பாஷா மற்றும் நிர்வாகிகள் சந்தித்தனர். உடன் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் உள்ளனர்.



இந்து பத்திரிக்கை தொழிற்சங்க தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு 40ஆண்டுகளாக தொழிற் சங்கத்திற்கு சொந்தமான திருமண மண்டபம் தனியாரின் ஆக்கிரமிப்பில் இருந்து சட்ட போராட்டம் வாயிலாக மீட்டெடுக்க பேருதவி புரிந்தமைக்கு பொது செயலாளர் எம்.கமலநாதன், தலைமையில் துணைத் தலைவர் மயிலை வேலு சம்மந்தம், இணை செயலாளர் சி.சந்திரன், பொருளாளர் பாலாஜி மற்றும் தொழிலாளர்கள் தங்களின் நன்றியை தெரிவித்தனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் –

# தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஜூன்.27,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

மதுரையில் நடைபெற்ற கழகப் பொருக்குழுவில் “ஓர் அணியில் தமிழ்நாடு” என்ற முன்னெடுப்பில் ஒவ்வொரு மாவட்டமும் 30 சதவிகிதம் உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

அதன் படி நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகக் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் ஆர். காந்தி, மாண்டல தேர்தல் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் நமது மாவட்டத்தில் 4 இலட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களி தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களைச் சேர்ப்பு - ‘ஓர் அணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தைவருகிற ஜூலை 1 ஆம் தேதி அன்று தொடங்கி வைக்கிறார்.

அதனையொட்டியும், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் படியும், நமது மாவட்டக் கழகக் கூட்டத் தீர்மானத்தின் படியும் “ஓர் அணியில் தமிழ் நாடு” முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர்கள் சேர்ப்பது சம்பந்தமாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியினர் ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

**செய்யூர் சட்டமன்றத் தொகுதி**

செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் நாளை ( 28. 6 .2025.-சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் சித்தாமூர் கூட்ரோட்டில் அமைந்துள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் “ஓர் அணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ் உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது.

**மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி**

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் நாளை (28. 6 .2025-சனிக்கிழமை) காலை 11 மணிக்கு ஜி எஸ் டி சாலையில் அமைந்துள்ள ஆர் .ஏ .ஆர். திருமண மண்டபத்தில் “ஓர் அணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ் உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது.

**உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி**

உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதியில் நாளை (28.6.2025-சனிக்கிழமை) பிற்பகல் 1 மணிக்கு ஆர்ப்பாக்கத்தில் அமைந்துள்ள பாலாஜி திருமண மண்டபத்தில் “ஓர் அணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ் உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது.

**காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி**

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் நாளை ( 28. 6.2025-சனிக்கிழமை) பிற்பகல் 3 மணி அளவில் கலைஞர் பவள விழா மாளிகையில் “ஓர் அணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ் உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது.

எனவே இக் கூட்டங்களில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில்

# பல்லாவரம் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA-2) ஆலோசனைக் கூட்டம்!

## டி. ஆர். பாலு எம்.பி. – ஆ.ராசா எம்.பி. – அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரை!

பல்லாவரம் ஜூன் -27

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று 27-6-2025. வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி அளவில் பல்லாவரம் 200 அடி சாலையில் சரவணா செல்வரத்தினம் ஸ்டோர்ஸ் அருகில் உள்ள கலைஞர் திடலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி தலைமையில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான வே. கருணாநிதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் ஜி. கே.ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கலந்த ஆலோசனைக்கூட்டத்தில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மண்டல தேர்தல் பணிகள் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராசா கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கிய சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

மேலும் கழகத் தீர்மானக் குழு செயலாளர் மீ. அ. வைத்தியலிங்கம் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ரபி அகமது தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா. நரேஷ் கண்ணா தொமுச இரா. பொன்ராம் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன் என். நவீன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள் கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள 442 வாக்குச்சாவடிகளில் நியமனம் செய்யப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA-2) உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் இக் கூட்டத்தில் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் நன்றி உரை கூற உள்ளார் இக்கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பாக கேட்டு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது


